NEW WAY OF BEING CHURCH

newbe+

14 ஜூலை 2024
பொதுக்காலம் ஆண்டின் 15 ஆம் ஞாயிறு

## மண்ணுலகிற்கு உப்பும் உலகிற்கு ஒளியும்:

ஆன்மீக ஒன்றிப்பில் பங்குகொள்ளும் உணர்வோடு தூதுரைத்தல், கொண்டாடுதல் மற்றும் செவிமடுத்தல் (மத்தேயு 5: 13-16)

மாதாந்திர கருப்பொருள்

முதியோர் மற்றும் நோயுற்றோரை அக்கறையுடன் பராமரித்தல்

# பணிக்காகத் தேர்ந்தெடுக்கப்பட்டு, ஆசீர்வதிக்கப்பட்டவர்கள்.

நாம் அனைவரும் கடவுளின் விருப்பத்தின்படி பணிசெய்ய அழைக்கப்பட்டுள்ளோம். நாம் தேர்ந்தெடுக்கப்பட்டு, மீட்கப்பட்டு தூய ஆவியால் முத்திரையிடப்பட்டு, மனிதகுலம் முழுமைக்கும் அன்புக் கடவுளின் முன் குறிக்கப்பட்ட நற்செய்தியைக் கொண்டுசெல்ல அனுப்பப்பட்டுள்ளோம்.

இஸ்ராயேலின் வடநாட்டில் உள்ள ஆலயங்கள் மாளிகைகள் அனைத்தும் அழிக்கப்படும் என்றும் எரோபாவாம் மன்னனின் தலைமுறைகளும் அழிக்கப்படும் என்றும் ஆமோஸ் இறைவாக்குரைத்தார். ஏனென்றால் அவர்கள் வேற்றுத்தெய்வ சிலைவழிபாடுகளைக் கடைப்பிடித்துவந்தனர். இதனால் பெத்தேலின் குருவான அமாட்சியா ஆமோசைப் பார்த்து உன்னுடைய நாடான யூதாவுக்கே நீ திரும்பப்போய்விடு. இங்கு இறைவாக்கு உரைக்காதே என்று எச்சரிக்கை விடுக்கின்றார். அக்காலத்தில் இறைவாக்கினர்கள் மக்களால் கொண்டாடப்படவில்லை இருந்தபோதும் அவர்கள் இறைவாக்குரைக்க தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள். அமாட்சியாவுக்கு ஆமோஸ் இவ்வாறு கூறுகிறார். இறைவாக்குரைப்பது என்னுடைய தேர்வு அல்ல; இஸ்ராயேல் மக்களுக்கு இறைவாக்குரைப்பது கடவுளின் திட்டம்.




இன்றைய இரண்டாம் வாசகத்தில் உலகம் தோற்றுவிக்கப்படுவதற்கு முன்னரே கடவுள் நம்மைத் தேர்ந்தெடுத்து ஆசீர்வதித்தார், ஏனென்றால் அது அவரது விருப்பம். நாம் தூயவராகவும், குறையில்லாதவர்களாகவும் கிறிஸ்துவின் அன்பினால் வாழவும் மீட்கப்படவும் வேண்டும் என்பது அவரது திட்டத்தில் உள்ளது. விண்ணிலுள்ளவை மண்ணிலுள்ளவை அனைத்தையும் தலையாகிய கிறிஸ்துவோடு அவரே இணைப்பார். அதுவே நம்மை விடுவித்து நம் வாழ்வால் அவரை மாட்சிப்படுத்தும் நமது உரிமைச்சொத்து.

நம்மை நாம் எப்படி அழைப்போம்? சீடர் என்றா அல்லது திருத்தூதர் என்றா? திருத்தூதர் என்பது ஒரு குறிப்பிட்ட இறைப்பணிக்காக அனுப்பப்பட்டவர். சீடர் என்பது கற்றுக்கொள்பவர் அல்லது மாணவர். நாம் இரண்டுமாக இருக்கிறோம். இயேசு தம்முடையப் பணிக்காலத்தில் தன்னைப் பின்பற்றிய சீடர்களிடமிருந்து பன்னிருவரைத் திருத்தூதர்களாகத் தேர்ந்தெடுத்தார் என்று நற்செய்தி எடுத்துரைக்கிறது. அவர்கள் நற்செய்தியை எடுத்துரைக்கவும், தீய ஆவிகளை விரட்டவும், உடல்நலமற்றோரைக் குணமாக்கவும், அவர்களுக்கு அதிகாரமளித்தார். அவர்களும் அவர் கூறியதைத் தான் செய்தார்கள். அவர்களோடு எதையும் கொண்டுசெல்ல வேண்டாம் என்று இயேசு கூறினார். ஏன்? அவர்கள் கடவுளின் இரக்கத்தை மட்டுமே நம்பியிருக்கவேண்டும் என்பதற்காகவா? அல்லது அவர்களின் கவலைகள், சுமைகள் அனைத்தையும் விட்டுவிட்டு ஆண்டவரை மட்டுமே நம்பிச்செல்லவேண்டுமா?

அவர்கள் ஏற்றுக்கொள்ளப்படாமல் போனாலும் அதைப் பற்றிக்கவலைப்படாமல் அவர்களின் பணியைத் தொடருமாறு அவர்களுக்குப் பணிக்கப்பட்டது. ஆண்டவராகிய இயேசுவே, எங்களைத் தேர்ந்தெடுத்ததற்காக உமக்கு நன்றி. திருத்தூதர்களைப் போல நம்பிக்கையைப் பெற்றுக்கொள்ளவும், உமது அன்பின் நற்செய்தியை அனைவருக்கும் எடுத்துரைக்கவும் எங்களுக்கு உதவியருளும்.

"தந்தையையும் தாயையும் மதித்து நட" இந்தக் கட்டளையை ஏற்று, வயதானவர்களை உண்மையாக கவனித்துக்கொண்டால், பயனற்றவர்கள் மற்றும் வீணான சுமை என்று கருதும் ஆபத்துகள் குறையும்.

திருத்தந்தை 2 ஆம் ஜோன் போல்







### இன்றைய இறைவார்த்தை:

ஆமோஸ் 7: 12-15

திபா: 85: 9-14

எபேசியர் 1: 3-14 (அ) 1: 3-10

மாற்கு: 6: 7-13

INTERNAL CIRCULATION ONLY
BUL 28/2024

**Published by:** Archdiocesan Pastoral Institute (API) | **Email:** api@archkl.org